ශ්‍රී ලංකා අග්නිදිග විශ්වවිද්‍යාලය
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

තැපැල් පෙට්ටිය / அஞ்சல் பெட்டி / P.O.Box: 01
ලිපිනය / விலாசம் / Address: University Park, Oluvil # 32360
වෙබ් අඩවිය / வெப் தளம் / Web site: http://www.seu.ac.lk

මගේ අංකය / எனது இலக்கம் / My Number: SEU/CEDPL / BA/ 2021/2022

11.09.2024

அன்புக்குரிய மாணவ / மாணவிகளுக்கு

**<u>கலைமாணி கற்கைநெறிக்கான மாணவர்களைப் பதிவு செய்தல் - 2021 / 2022</u>**
**<u>Registration of Student for Bachelor of Arts - 2021 / 2022</u>**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற 2021/2022 ஆம் கல்வி ஆண்டுக்கான கலைமாணி கற்கைநெறிக்கான மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக 25.08.2024 இல் நடைபெற்ற நுழைவுப் பரீட்சையின் வெட்டுப்புள்ளியாக 56 புள்ளிகள் மற்றும் அதற்கு மேல் பெற்ற மாணவர்கள் இக்கற்கை நெறிக்கு பதிவு செய்யத் தகுதி பெற்றுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

இக்கற்கை நெறிக்கான முழுக்கட்டணம் ரூபா. 150,000.00 ஆகும். இவை தவணை அடிப்படையில் மூன்று தடவைகளில் செலுத்தமுடியும். கட்டண விபரம் வருமாறு:

| | |
|---|---|
| முதலாம் வருடம் | : Rs. 50,000.00 |
| இரண்டாம் வருடம் | : Rs. 50,000.00 |
| மூன்றாம் வருடம் | : Rs. 50,000.00 |

மேற்படி மாணவர்களைப் பதிவு செய்வதற்காக ஆவணங்களையும், சான்றிதழ்களையும் சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்காக மாணவர்கள் எதிர்வரும் **01.10.2024** முதல் **07.10.2024** வரை நேரடியாக வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். இதன் போது G.C.E. (O/L), G.C.E. (A/L) கல்விச்சான்றிதழ்களுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தில் மெய்பார்த்தல் (Verification) செய்த சான்றிதழுடனும், பிறப்புச்சான்றிதழ், ஆள் அடையாள அட்டை என்பனவற்றினையும் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எனவே ஆவணங்கள் சரிபார்த்தலின் பின் முதலாம் வருடக் கட்டணமான ரூபா. 50,000.00 இனை தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அன்றைய தினமே செலுத்தி பதிவுகளை முறைமைப்படுத்துவதற்குரிய ஆயத்தங்களுடன் வருகைதரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:

- பதிவானது வெள்ளிக்கிழமை தவிர (04.10.2024) ஏனைய நாட்களில் காலை 09.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தில் நடைபெறும்.

பிரதிப்பதிவாளர்
வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
பதிவாளருக்காக
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Deputy Registrar
Center for External Degrees & Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka
University Park, Oluvil # 32360